1996 பிப்ரவரி 15]

ஏற்கெனவே இருந்த வசதிகள் அங்கே குறைக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் கூடுதலாக வசதிகளை இந்த அரசு ஏற்படுத்தும். எனவேதான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன், ஒவ்வொரு மருத்துவமனையிலேயும் சி.டி. ஸ்கேன், போன் வசதிகள் ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம் என்று. அதனால்தான் மதுரை என்றால் மதுரையைச் சுற்றியிருக்கிற பகுதிக்கு, திருநெல்வேலி என்றால் திருநெல்வேலியைச் சுற்றி இருக்கிற பகுதிக்கு, கோவை என்றால் கோவையைச் சுற்றியிருக்கிற பகுதிக்கு, இப்படி ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து முக்கியமான கருவிகளை அங்கே வாங்கிக் கொடுத்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும், தூத்துக்குடியைப் பொறுத்தவரை அரசாங்கம் தனிக் கவனம் எடுத்துக்கொண்டு தேவையான மாவட்டத் தலைநகரத்திற்குத் தேவையான வசதிகள் இருந்தாலும்கூட, கூடுதலாக என்ன வசதி தேவை என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

5--

அரசு மூலிகைத் தோட்டம்

**70715*--திரு. இரா. தாமரைக்கனி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, செம்பகத்தோப்பு அருகே உள்ள ஸ்ரீஆண்டாள் கோயில் நிலத்தில் உள்ள அரசு மூலிகைத் தோட்டம் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஏனென்றால் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளான நீண்ட காலக் குத்தகை அனுமதி கிணறு மற்றும் முள்வேலி அமைக்கத் தேவையான அனுமதியை தேவஸ்தானம் தரவில்லை. மேலும் பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்ப ரீதியாகத் திட்டம் வெற்றிகரமாக அமையாது என்று ஆய்வு தெரிவிக்கிறது.

முற்பகல் 10-25

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள செம்பகத்தோப்பில் ஆயிரக்கணக்கான மூலிகைகள் இருக்கின்றன. ஸ்ரீஆண்டாள் துளசிச் செடியிலேதான் அவதரித்தார் என்ற வரலாறுகள் எல்லாம் உண்டு. திருப்பதி ஏழுமலையானுக்கு ஸ்ரீவல்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலினுடைய துளசி மாலைதான் போகும். ஆய்வு பண்ணித்தான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போது அவரிடம் விசேஷ அனுமதி பெற்று மூலிகைத் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. ** அங்கே தேவஸ்தானம் வேலி போட அனுமதி கொடுக்கவில்லை; அங்கே மூலிகைகள் எல்லாம் விளையாது என்று ** தகவல் அரசுக்கு செயற்குறிப்பு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திலே ** குற்றச்சாட்டு இருக்கக் கூடாது. ** என்பதும் கடைசியிலே சொன்ன ** என்ற அந்தச் சொல்லும் நீக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. மாண்புமிகு தமிழக முதல்வராக இருந்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு பண்ணி,--அப்போது ஹண்டே அவர்கள் சுகாதார அமைச்சராக இருந்தார்--ரூபாய் எல்லாம் ஒதுக்கி, தேவஸ்தானத்திலிருந்து அனுமதி கொடுத்துத்தான் 33 ஏக்கர் கொடுத்தது. தவறான தகவலைச் சொல்கிறார்கள். புரட்சி தலைவர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. கலைஞர் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் மீண்டும் அந்த மூலிகைத் தோட்டம் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தேவஸ்தானம் குறுகிய குத்தகைக்குத்தான் கொடுக்கிறது. எனவே குறுகிய குத்தகைக்கு கொடுக்கின்றபோது அதிலே நிரந்தரமான முன்னேற்றங்களைச் செய்ய முடியாத நிலை, ஏற்படுகிறது என்று தெரிவிக்கிறார்கள். எனவே ஒரு நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுத்தால் அதில் கிணறு அமைப்பது, வேலி போடுவது மற்ற பல முன்னேற்றங்களை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1996 பிப்ரவரி 15]

நம்மால் செய்ய முடியும். குறுகிய காலத்திற்குக் கொடுத்தால் இவற்றையெல்லாம் செய்த பின்னாலே அடுத்த முறை அவர்கள் நீட்டிக்க மறுத்தால் இதெல்லாம் வீணாகும் என்ற நிலையிலேதான் அதிகாரிகள் இதைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருக்கு இருக்கின்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கின்ற காரணத்தால் நான் வேண்டுமானால் நேரடியாக அந்த தேவஸ்தானத்திற்குக் கடிதம் எழுதுகிறேன். அவர்கள் ஒப்புக்கொண்டால் இதைச் செய்வதற்கு நமக்கு எள்ளளவும் தடை கிடையாது. நமக்குச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. ஆனால் இடையிலே இந்தச் சிக்கல் ஏற்பட்ட காரணத்தால் அதை விரைவாகச் செய்ய முடியவில்லை. தேவையென்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த தேவஸ்தானத்திடத்திலே பேச வேண்டும். நான் நேரடியாகக் கடிதம் எழுதுகிறேன். ஒப்புக்கொண்டால் கண்டிப்பாக இதைச் செய்யலாம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைத் தோட்டம் 33 ஏக்கர் லீசுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அதிகாரிகள் வந்து மூலிகைத் தோட்டமே பயிரிடப்படவில்லை. அவர்கள் சப்–லீசுக்கு வேறு ஆளுக்கு விட்டுவிட்டார்கள். இதுதான் உண்மையான நிலவரம். இன்னும் அந்த லீஸ் தொகை பாக்கி கொடுப்பதில் தகராறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதல்வரிடம் விசேஷ அனுமதி பெற்று தாங்களே இடத்திற்கு விஜயம் செய்து - ஒரு மூலிகைத் தோட்டம் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு தூரம் சிரமப்படுகிறோம்? திடீரென்று மூடிவிட்டார்களே - இதை ஆரம்பிப்பதற்கு விசேஷ கவனம் செலுத்தி மாண்புமிகு முதல்வரிடம் நீங்கள் கலந்தாலோசித்து நேரடியாக அந்த இடத்திற்கு வந்து மூலிகைத் தோட்டம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன். சாக்குபோக்கு சொல்ல வேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சாக்குபோக்கு சொல்கிற விஷயம் ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமானால் நேரடியாகப்போய் அவர்களை ஒப்புக்கொள்ள வைத்துவிட்டால் பிரச்சினை இல்லை. ஐந்தாண்டுக் காலத்திற்கு மேலே அவர்கள் லீஸ் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இரண்டு முறை இப்படி நீட்டிக்கப்பட்டிருக்கிறது. எனவே இதிலே நிறைய பணத்தை செலவழித்துச் செய்த பின்னாலே, தேவஸ்தானம் நீட்டிக்கொடுக்க

மறுத்துவிட்டால் அந்தப் பணம் வீணாகப் போகும் என்ற அடிப்படையிலேதான் அவர்கள் அங்கே செய்வதற்கு மறுக்கிறார்கள். ஆனால் நிறைய இடங்களிலே, கொல்லிமலை போன்ற இடங்களிலே நூற்றுக்கணக்கான ஏக்கரை நாம் எடுத்து மூலிகைப் பண்ணையை ஏற்படுத்தி வருகிறோம். சென்னையிலே கூட மூலிகைப் பண்ணையை ஏற்படுத்தி வருகிறோம். எனவே அங்கே நல்ல மூலிகை கிடைக்கும் என்று சொன்னால் அதைப் போய் நாம் தட்டிக்கழிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அங்கே இருக்கின்ற தேவஸ்தானம் நமக்கு நீண்ட காலக் குத்தகைக்கு அந்த 33 ஏக்கரை கொடுப்பதற்குத் தயாராக இருந்தால் அதிலே எவ்வளவு வேண்டுமானாலும் செலவழித்து நாம் அங்கே பயிரிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும். அதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தி தேவஸ்தானத்திடத்திலே பேசி அதை நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கையை அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அரசை பொறுத்தவரையிலே தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. கே.ஏ. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

6--

ஒசூர்-பெங்களூர் துரித இரயில்

65342--திரு. கே.ஏ. மனோகரன்:

மாண்புமிகு போக்குவரதது மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தொழிற்சாலைகள் நிறைந்துள்ள ஒசூர் நகருக்கும் பெங்களூருக்கும் இடையே ஓர் துரித இரயில் (Fast Non-Stop Train) இயக்க மத்திய அரசுக்கு பரிந்துரைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை *அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது சேலம்-பனஸ்வாடி மீட்டர்கேஜ் தடத்தில் பெங்களூரில் உள்ள பனஸ்வாடிக்கும் ஒசூருக்கும் இடையே மூன்று இணை பயணிகள் இரயில் வண்டிகள் இயக்கப்பட்டு வருகின்றன. இது தற்போதைய